சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – +1 பயிலும் பிற்படுத்தப்பட்ட / மிகப்பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ / மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் 2007–08 ஆம் ஆண்டில் செயல்படுத்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிந2)த் துறை.**

**அரசு ஆணை(நிலை) எண். 82** **நாள். 6.9. 2007.**

**திருவள்ளுவர் ஆண்டு,**
**சர்வஜித், ஆவணி 20**

**படிக்கப்பட்டது :**

அரசு ஆணை(நிலை) எண்.61, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள்.8.9.06.

**படிக்க :**

1. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை, கடிதம் ந.க.எண். டி1/8512/2006, நாள். 26.4.07 மற்றும் 31.7.07.
2. அரசு கடித எண்.4628/சிந2/2007, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள்.31.7.07.

* * * *

**ஆணை :**

அரசு / அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெற்று 11 மற்றும் 12 –ஆம் வகுப்புகள் சுயநிதி அடிப்படையில் இயங்கும் பள்ளிகளில் (Partly Aided Schools) +1 வகுப்பில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ / மாணவிகளுக்கும், கடந்த ஆண்டில் (2006–07) இலவச மிதிவண்டி வழங்க மேலே படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே வரிசை எண் 1 –ல் படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட நலத் துறை இயக்குநரின் கடிதத்தில், நடப்பாண்டில், இலவச மிதிவண்டிகள் வழங்குவதற்கான செயற்குறிப்பினை பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அரசுக்கு அனுப்பிவைத்துள்ளார். நடப்பாண்டில் (2007– 08) இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தில் பயன் பெறவுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவ / மாணவிகளின் எண்ணிக்கை, கடந்த ஆண்டின் தேவை பட்டியலின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு, தோராயமாக 3,64,366 மாணவ / மாணவிகள் பயன் பெறுவர் என்றும், இதற்கென ஒரு மிதிவண்டியின் விலை தோராயமாக

ரூ.2,000/– எனக் கணக்கீடு செய்யப்பட்டு 3,64,366 மிதிவண்டிகளுக்கு தோராயமாக ரூ.72.87 கோடி செலவினம் ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளார். மேலும், 2007–08 ஆம் ஆண்டில் இலவச மிதிவண்டிகள் திட்டத்தில் பயன்பெற உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியரின் துல்லியமான எண்ணிக்கை அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்களிடமிருந்து தேவைப்பட்டியல் பெறப்பட்ட பிறகு இறுதி செய்யப்படும் என்றும், மிதிவண்டிகளின் விலையை பொறுத்த மட்டில், அரசு நிர்ணயிக்கும் கொள்முதல் குழுவால் முடிவு செய்யப்பட்ட பின்னரே இறுதி செய்ய இயலும் எனவும் தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் நடப்பாண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த +1 பயிலும் மாணவ / மாணவியர்க்கும் கடந்த ஆண்டு (2006–07) தாமதச் சேர்க்கை, இலவச பஸ் பாஸ் போன்ற காரணங்களினால் இலவச மிதிவண்டி பெறாத +1 பயின்ற (தற்போது +2 பயிலும்) மாணவ / மாணவிகளுக்கும் இலவச மிதிவண்டி வழங்குவதற்கான அரசாணைகளை வெளியிடுமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. நடப்பாண்டில் (2007–08) இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக வரவு–செலவு திட்டத்தில், ரூ.7293.45 இலட்சம் (ரூ.72.93 கோடி) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. மேலே பத்தி 2–ல் உள்ள பிற்படுத்தப்பட்டோர் இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கவனமுடன் பரிசீலித்து கடந்த ஆண்டைப் போலவே, நடப்பாண்டிலும் இலவச மிதிவண்டிகள் வழங்கலாம் என முடிவு செய்து கீழ்க்கண்ட ஆணைகளை அரசு வெளியிடுகிறது :-

(i) 2007–2008 ஆம் ஆண்டு அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் / மற்றும் பகுதியாக நிதியுதவி பெற்று 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளை சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பள்ளிகளில் +1 வகுப்பில் படிக்கும் மாணவ / மாணவியர்களுக்கும் கடந்த ஆண்டு (2006–07) தாமதச் சேர்க்கை இலவச பேருந்து பயண அட்டை போன்ற காரணங்களால் இலவச மிதி வண்டி பெறாத +1 வகுப்பில் பயின்ற (தற்போது +2 பயிலும்) பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சுமார் 3,64,366 மாணவ / மாணவிகளுக்கு சுமார் ரூ.72.87 கோடி செலவினத்தில் இலவச மிதிவண்டிகள் வழங்கலாம். இத்திட்டத்தின் கீழ் இலவச பேருந்து பயண அட்டை பெறுவோரும் இலவசமாக மிதிவண்டி பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

(ii) Cycle shall be with Standard Accessories viz. P.V.C. Saddle, Bell, Lock, Full Stand, Carrier, Full Gear Case and also optional Accessories of front basket, and the cost per bi-cycle includes fitting charges and secondary freight charges. The Bi-cycle will be delivered at the respective Schools.

(iii) பள்ளியுடன் இணைந்துள்ள விடுதிகளில் (Residential Schools) தங்கியுள்ளோர் மற்றும் பள்ளியும், விடுதியும் ஒரே வளாகத்தில் அமைந்துள்ள (Schools and Hostels are in the same campus) விடுதியில் தங்கியுள்ளோர் ஆகியோர், இத்திட்டத்தின் கீழ் இலவச மிதிவண்டிகள் பெறுவதற்குத் தகுதியற்றவர் ஆவர்.

(iv) அரசு வழங்கும் இலவச மிதிவண்டிகளைத் தவறாகப் பயன்படுத்துவதை தடுப்பதற்கு, மிதிவண்டிகளுக்கு எண்ணிடப்பட வேண்டும்.

(v) அரசுத் திட்டத்தின் கீழ் மிதிவண்டிகள் வழங்கப்பட்டது என்பதைக் காட்டிட உரிய முத்திரை பொறுத்தப்பட வேண்டும்.

(vi) தவறாகப் பயன்படுத்தினாலோ அல்லது பிறருக்கு விற்பனை செய்தாலோ பயனாளிகளிடமிருந்து மிதிவண்டியின் மதிப்பிற்குரிய தொகை திரும்பப் பெறப்படும்.

(vii) சென்ற ஆண்டு (2006–07) திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 மற்றும் அதன் விதிகள் 2000 –ன் கீழ் வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி பின்வரும் கொள்முதல் குழு மூலம் மத்தியப்படுத்தப்பட்ட முறையில் (Centralised) மிதிவண்டிகள் கொள்முதல் செய்யப்பட வேண்டும். மேலும், மேலே வரிசை எண் 2–ல் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட திருத்திய நிபந்தனைகளின்படி ஒப்பந்தப் புள்ளிகள் கோர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கான கொள்முதல் குழு கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது :-

| | | |
|---|---|---|
| அ | இயக்குநர்,<br>பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை | தலைவர் |
| ஆ | இயக்குநர்,<br>மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை | உறுப்பினர் |
| இ | இப்பொருள் தொடர்புடைய சிறப்புச் செயலர் / கூடுதல் செயலர் / துணைச் செயலர், நிதித் துறை | உறுப்பினர் |
| ஈ | இயக்குநர்,<br>ஆதி திராவிடர் நலத் துறை,<br>சென்னை –5 | உறுப்பினர் |
| உ | பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்தின் கணக்கு அலுவலர் | உறுப்பினர் |
| ஊ | மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்தின் கணக்கு அலுவலர் | உறுப்பினர் |
| எ | தொழில் வணிகத் துறை இணை இயக்குநர் (Engineering) | உறுப்பினர் |

(viii) இத்திட்டம் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மாணவ / மாணவியரை பொறுத்தமட்டில், பிற்படுத்தப்பட்ட நல இயக்குநர் மூலமும், மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல மாணவ / மாணவியரை பொறுத்தமட்டில், மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் மூலமும் செயல்படுத்தப்படவேண்டும்.

(xi) கொள்முதல் குழுவால் விலை மற்றும் நிறுவனம் இறுதி செய்யப்பட்டபின், மாவட்ட பிற்படுத்தப்பட்ட நல அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட தேவைப்பட்டியலின்

அடிப்படையில் மேலே குறிப்பிட்டவாறு பிற்படுத்தப்பட்ட நல இயக்குநர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் ஆகியோர்களால் கொள்முதல் ஆணை வழங்கப்படவேண்டும்.

(x) மாவட்ட ஆட்சியர்கள், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தகுந்த ஏற்பாடுகள் செய்து மிதிவண்டிகளை மாணவ / மாணவியர்களுக்கு வழங்க வேண்டும். துணை ஆட்சியர், ஊராட்சி மன்ற ஆணையர் அளவிற்குக் குறையாத அலுவலர்களை ஒவ்வொரு வட்டத்திற்கும் முகமை அலுவலர்களாக நியமித்து மிதிவண்டிகள் சரியாக வழங்கப்படுவதை உறுதி செய்யப்படவேண்டும். அதற்குப் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு மிதிவண்டிகள் வழங்கப்பட்டதற்கான ஒப்புதல்களும், பதிவேடுகளும் மிதிவண்டிகள் வழங்கப்பட்ட பின் மாவட்ட ஆட்சியர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். வழங்கப்பட்ட மிதிவண்டிகளுக்குத் தேவையான தொகையை மாவட்ட ஆட்சியர்கள் வழங்கவேண்டும். இதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்குத் தேவையான தொகையை நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியைப் பெற்று மிதிவண்டிகளுக்குத் தேவையான தொகையை மாவட்ட ஆட்சியர் வழங்குவார். மாவட்ட ஆட்சியர்களுக்குத் தேவையான நிதியை பங்கீடு செய்து வழங்க பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை இயக்குநர் ஆகியோரைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்படவேண்டும். இத்திட்டத்தின் செயலாக்கத்தை மாவட்ட அளவில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க பின்வருமாறு குழு அமைக்கபடுகிறது.

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சித் தலைவர் | தலைவர் |
| மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் | ஒருங்கிணைப்பு அலுவலர் |
| மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் | உறுப்பினர் செயலர் |
| சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் | உறுப்பினர் |
| மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் | உறுப்பினர் |
| மிதிவண்டிகள் வழங்கும் நிறுவனத்தின் மாவட்ட பிரதிநிதி | உறுப்பினர் |

(xi) இச்செயலாக்கக் குழு வாரம் ஒருமுறை திங்கட்கிழமை மக்கள் குறை தீர்க்கும் பணி முடிந்தபின்னர் கூடி, இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் செயலாக்கத்தில் உள்ள பல்வேறு பிரச்சனைகளை விவாதித்து கூட்ட நடவடிக்கைக் குறிப்பினை (Minutes of the Meeting) தயாரித்து அதன் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(xii) சென்ற ஆண்டைப் (2006–2007) போலவே இலவச மிதிவண்டிகளில் பின்பக்கம் பொருத்தப்படும் கேரியரில் (கருப்பு வண்ணம்) மாறுதல் ஏதுமின்றி வழங்கப்படவேண்டும்.

(xiii) கடந்த ஆண்டில் (2006–2007) தாமத சேர்க்கை மற்றும் இலவச பஸ் பாஸ் போன்ற காரணங்களினால் இலவச மிதிவண்டிகள் பெறாத தகுதியுள்ள +1 பயின்ற (தற்போது +2 பயிலும்) மாணவ / மாணவிகளுக்கு நடப்பாண்டில் (2007–2008) இலவச மிதிவண்டிகள் வழங்கிடலாம்.

5. இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்படவேண்டும்.

(i) <u>பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான மிதிவண்டி (2007–08)</u>

“2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KU – அரசு / அரசு மானியம் பெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதி அடிப்படையில் பதினொன்றாம் மற்றும் பனிரெண்டாம் வகுப்புகளை நடத்தும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் பதினொன்றாம் மற்றும் பனிரெண்டாம் வகுப்பில் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு இலவசமாக மிதிவண்டிகள் வழங்குதல் 09 – உதவி மானியங்கள் – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்”.
(த.தொ.கு. 2225 – 03 – 277 – KU – 0936)

(ii) <u>பிற்படுத்தப்பட்ட மாணவியர்களுக்கான மிதிவண்டி (2007–08)</u>

“2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KS – அரசு / அரசிடமிருந்து மானியம் உதவி எபறும் மேனிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 –ம் வகுப்புகளில் படிக்கின்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்குதல் – 09 மானிய உதவி – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்”.
(த.தொ.கு. 2225 – 03 – 277 – KS – 0930)

(iii) மிகப்<u>பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான மிதிவண்டி (2007–08)</u>

“2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KT – அரசு / அரசு மானியம் பெறும் பள்ளிகள் மற்றும் சுயநிதி அடிப்படையில் பதினொன்றாம் மற்றும் பனிரெண்டாம் வகுப்புகளை நடத்தும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் பதினொன்றாம் மற்றும் பனிரெண்டாம் வகுப்பில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசமாக மிதிவண்டிகள் வழங்குதல் –09 – உதவி மானியங்கள்– 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்”.
(த.தொ.கு. 2225 – 03 – 277 – KT – 0938)

(iv) மிகப்<u>பிற்படுத்தப்பட்ட மாணவியர்களுக்கான மிதிவண்டி (2007–08)</u>

“2225 – ஆதி திராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277. கல்வி பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KR –அரசு / அரசிடமிருந்து மானியம் பெறும் மேனிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 –ம் வகுப்புளில் படிக்கின்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்குதல் –09 – உதவி மானியங்கள் – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்”.
(த.தொ.கு. 2225 – 03 – 277 – KR – 0932)

**6.** இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.200/ADS(GV)/2007, நாள். **6.9.2007. –**ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ந. வாசுதேவன்,**
**அரசு செயலாளர்.**

<u>பெறுநர் :</u>

பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை –5
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை –5
ஆணையர், சிறுபான்மையினர் நலம், சென்னை –5
இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை –5
இயக்குநர், தொழில் மற்றும் வணிகத் துறை, சென்னை –5
கருவூலம் மற்றும் கணக்குத் துறை ஆணையர், பனகல் மாளிகை, சென்னை –15
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35/6(பெயரில்)
மாநிலக் கணக்காயர், சென்னை– 6/18/35
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை –5/9/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,மதுரை
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
கொள்முதல் குழு உறுப்பினர்கள்
மாவட்டக் குழு உறுப்பினர்கள்

**<u>நகல்:</u>**

அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள்
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை –9
அமைச்சரின் (பிந) சிறப்புநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9
அனைத்து அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்கள், சென்னை –9
நிதித் (பி,மி.பி (ம) சி.ந.) துறை, சென்னை–9
பள்ளிக் கல்வித் துறை, சென்னை –9
ஆதி திராவிடர் நலத் துறை /சமூகம் மற்றும் சத்துணவுத் துறை, சென்னை –9
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை –9
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் அனைத்து பிரிவுகள், சென்னை –9
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.